WILDLIFE WEEK CELEBRATION – October 02-08, 2025

An Awareness Poster designed and developed by CPREEC EIACP PC-RP, Chennai on Wildlife week celebration from October 02-08, 2025

Celebrating Wildlife Week (02nd – 08th October, 2025), CPREEC EIACP PC-RP's Ooty Field Office organized an awareness program and released an awareness poster at Government High school, Kanerimukku, Kotagiri, The Nilgiris. A total of 8 teachers and 60 students attended the programme and distributed the poster.

அரசு பள்ளியில் கானுயிர் வார விழா

கோத்தகிரி நகராட்சி கன்னேரிமுக்கு அரசு உயர்நிலை பள்ளியில் கானுயிர் வார விழா நடந்தது.

ஊட்டி, அக். 9: கோத்தகிரி நகராட்சி கன்னேரிமுக்கு அரசு உயர்நிலை பள்ளியில் கானுயிர் வார விழா நடந்தது.

ஊட்டியில் உள்ள சிபிஆர் சுற்றுச்சூழல் கல்வி மையம் சார்பில் நடந்த கானுயிர் வார விழா நிகழ்விற்கு தேசிய பசுமைபடை ஒருங்கிணைப்பாளர் ராதாகிருஷ்ணன் வரவேற்றார். பள்ளி தலைமை ஆசிரியர் அரவிந்தன் மையத்தின் கானுயிர் காப்போம் போன்ற பிரசார போஸ்டர்களை வெளியிட மாணவர்கள் பெற்றுக் கொண்டனர்.

வனம் என்பது மனிதனுக்கும் மற்ற உயிரினங்களுக்கும் அவசியமாக கருதப்படும் காற்று, நீர் மற்றும் உணவு போன்ற தேவைகளை அளவில்லாமல் வழங்கி வருகின்றது.

இன்றைய காலகட்டத்தில் உலகில் வனங்களும் வன உயிரினங்களும் மனிதனால் அழிக்கப்பட்டு வருகிறது. இது எதிர்கால சந்ததியர்க்கு வாழ்வாதார பிரச்சனைகளை உருவாக்கும் என்பதால் வனத்தை பாதுகாக்கவேண்டும், என எடுத்துரைக்கப்பட்டது.

இயற்கை விவசாயி திம்பட்டி ராம்தாஸ் விஷமில்லா காய்கறிகள் விளைவிப்பது மற்றும் வீட்டுத்தோட்டம் அமைப்பது பற்றி விளக்கமளித்தார். முடிவில் வனவளம் காக்க மாணவர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

Press clipping of Wildlife Week Celebration by CPREEC EIACP PC-RP,
Ooty field office from October 02-08, 2025. (Dinakaran Tamil Newspaper, Coimbatore, 09.10.2025)

அரசு பள்ளியில் கானுயிர் வார விழா
வன வளத்தை பாதுகாக்க உறுதியேற்பு

கோத்தகிரி, அக். 10–

கோத்தகிரி கன்னேரிமுக்கு அரசு உயர்நிலைப் பள்ளியில், சி.பி.ஆர்., சுற்றுச்சூழல் கல்வி மையம் சார்பில் கானுயிர் வார விழா நடந்தது.

தேசிய பசுமை படை ஒருங்கிணைப்பாளர் ராதாகிருஷ்ணன் வரவேற்றார். பள்ளி தலைமை ஆசிரியர் அரவிந்தன் தலைமை வகித்து, 'கானுயிர் காப்போம்' பிரசாரதுண்டு பிரசுரம் வினியோகித்து, விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

சி.பி.ஆர்., சுற்றுச்சூழல் கல்வி மைய களஅலுவலர் குமாரவேலு பேசுகையில், ''மனிதனுக்கும், மற்ற உயிரினங்களுக்கும் அவசியமாக கருதப்படும் காற்று, நீர் ஆகியவை உணவு பொருட்கள் உள்ளிட்ட, தேவைகளை அளவில்லாமல் வழங்கி வருகிறது. இன்றைய சூழலில், வனங்களும், வன உயிரினங்களும் மனிதனால் அழிக்கப்பட்டு வருவது, எதிர்கால சந்ததியருக்கு வாழ்வாதார பிரச்னைகளை உருவாக்கும் என்பதால், வன பலத்தை பாதுகாப்பது அவசர அவசியம்,'' என்றார்.

கோத்தகிரி கன்னேரிமுக்கு அரசு உயர்நிலைப் பள்ளியில், சி.பி.ஆர்., சுற்றுச்சூழல் கல்வி மையம் சார்பில் கானுயிர் வார விழா நடந்தது.

இயற்கை விவசாயி ராமதாஸ், 'விஷமில்லா காய்கறிகள் விளைவிப்பது, வீட்டு தோட்டம் அமைப்பது' குறித்து விளக்கம் அளித்தார். தொடர்ந்து வனவளம் காப்பது குறித்து மாணவர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். ஆசிரியர்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் மாணவர்கள் பலர் பங்கேற்றனர்.

Press clipping of Wildlife Week Celebration by CPREEC EIACP PC-RP,
Ooty field office from October 02-08, 2025 (Dinamalar Tamil Newspaper, Coimbatore, 10.10.2025)